**Why do I need to see an anaesthetist during my pregnancy?** **TAMIL**

**Information for pregnant women with a high body mass index (BMI)**

# என்னுடைய கர்ப்பத்தின் போது நான் ஒரு மயக்கமருந்து நிபுணரைப் பார்ப்பது ஏன் அவசியமாகிறது?

## உயர் உடல் எடை குறியீட்டெண் (BMI) கொண்ட கர்ப்பிணிப் பெண்களுக்கானத் தகவல்

**தங்களுடைய குழந்தையை பிரசவிப்பதில் கூடுதல் உதவி தேவைப்படக்கூடும் பெண்களை அடையாளம் காண்பது கர்ப்ப கால பராமரிப்பின் நோக்கங்களில் ஒன்றாகும். இதை ஏற்படுத்தக்கூடும் ஒரே விஷயம் உயர் உடல் எடை குறியீட்டெண் —பிஎம்ஐ ஆகும்.** (உடல் எடை குறியீட்டெண் என்பது உங்கள் உயரத்திற்கும், எடைக்கும் இடையே உள்ளத் தொடர்பு ஆகும் மற்றும் நீங்கள் எந்த அளவு அதிக எடை கொண்டவராக உள்ளீர்கள் என்பதை கணக்கீடு செய்யும் ஒரு முறை ஆகும்.) உதாரணமாக, உங்களுடைய பிஎம்ஐ 35 க்கு மேல் இருந்தால், ஒரு சிசேரியன் அறுவை சிகிச்சை (மற்றும் ஒரு மயக்கமருந்து) தேவைப்படுவதற்கான வாய்ப்பு பிஎம்ஐ சாதாரண விகிதமான 20 முதல் 25 க்குள் இருக்கும் பெண்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகம். (இந்த ஆராய்ச்சியை உள்ளடக்கிய ஆய்வறிக்கை இந்த சிற்றேட்டின் இறுதியில் பட்டியலிடப்பட்டுள்ளது)

பெரும்பாலான நிகழ்வுகளில், சிசேரியன் அறுவை சிகிச்சைக்கு பகுதி உணர்வகற்றும் மயக்கமருந்தை (தண்டுவட ஊசி ஒன்றின் மூலம் அல்லது தண்டுவட மேல்சவ்வில் கதீட்டர் மூலம்) நீங்கள் பெறுவது சிறந்தது. உடலின் கீழ்ப் பகுதியை உணர்விழக்கச் செய்ய உங்கள் முதுகில் ஊசி போடப்படுகிறது (உங்கள் தண்டுவடத்தில் ஊசிமருந்து உட்செலுத்துவதன் மூலமாகவோ அல்லது உங்கள் முதுகில் வைக்கப்பட்டுள்ள ஒரு குழாய் மூலமாகவோ) என்பதே இதன் பொருள் ஆகும். பகுதி உணர்வகற்றும் மயக்கமருந்தில், அறுவை சிகிச்சையின் போது நீங்கள் விழித்திருப்பீர்கள். விழித்திருப்பதால் அறுவை சிகிச்சையின் போதும், அதற்கு பின்பும் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் பல நன்மைகள் உள்ளன. குழந்தையை முடிந்தவரை சீக்கிரமாக வெளியில் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் நேரங்களும் இங்கு உள்ளன. பிரசவவலியின் போது உங்களுக்கு தண்டுவட மேல்சவ்வில் கதீட்டர் வழியாக மயக்கமருந்து அளிக்கப்பட்டு, அது நன்றாக வேலை செய்து கொண்டிருக்கிறது என்றால், அதை நாம் சிசேரியன் அறுவை சிகிச்சைக்காகவும் அல்லது உங்கள் குழந்தையை ஒரு சிறப்புக் கருவியை உதாரணமாக கத்திரிக்கோல்களை அல்லது வெற்றிடக்கோல்களைப் (உறிஞ்சும் கப்) பயன்படுத்தி வெளியில் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் போதும் பயன்படுத்த இயலும்.

உங்களுக்கு ஒரு உயர் உடல் எடை குறியீட்டெண் இருந்தால், அது மயக்கமருந்து அளிக்கும் செயல்முறைகளை மிகுந்த சிரமம் கொண்டதாக ஆக்கலாம். மயக்கமருந்தை அளிப்பதற்கான ஊசியை உட்செலுத்தும் சரியான இடத்தை கண்டுபிடிப்பது கடினமாகவும் மற்றும் மயக்கமருந்து நிபுணர் உடனடியாக பணியை தொடங்குவது மிகுந்த சிரமமாகவும் இருக்கக்கூடும். பொது உணர்வகற்றும் மயக்கமருந்து அளித்தலில் அறுவை சிகிச்சையின் போதும், அதற்குப் பின்னும் உயர் பிஎம்ஐ (BMI) அதிக அளவு பிரச்சினைகளை விளைவிக்கலாம் (ஒரு பொது உணர்வகற்றும் மயக்கமருந்தை நீங்கள் பெற்றால், அறுவை சிகிச்சையின் போது நீங்கள் தூக்க நிலையில் இருப்பீர்கள்).

**உங்கள் கர்ப்ப காலத்தின் போது மயக்கமருந்து நிபுணரிடம் பேச உங்களுக்கு ஒரு சந்திப்பு நேரம் வழங்கப்படும்.** உங்கள் பிரசவத் தேதிக்கு முன்பு உங்களை பார்த்து, பரிசோதிக்க இந்த சந்திப்பு எங்களை அனுமதிக்கிறது. உங்கள் பிரசவ வலி மற்றும் பிரசவம் ஆகியவற்றுக்கான வலிநிவராணம் மற்றும் மயக்கமருந்து தேர்வுகளை திட்டமிட்டு, அது குறித்து நாங்கள் உங்களோடு கலந்துரையாட முடியும். இதை நீங்கள் பிரசவ வலியில் இருக்கும்போது செய்வதை விட இளைப்பாறுதலான சுற்றுவட்டாரங்களில் மேற்கொள்வது எளிதாக இருக்கும். பிரசவத்தின் போது காரியங்கள் மிகவும் விரைவாக நடக்கக்கூடும் மற்றும் நீங்கள் எவ்வளவு தகவல்களை தெரிந்து வைத்துள்ளீர்களோ அந்த அளவு நீங்கள் தயார்நிலையில் இருப்பீர்கள்.

**இந்தக் கலந்துரையாடலுக்குப் பின் பிரசவத்தின் வலி நிவாரணத்திற்காக பின்வரும் திட்டங்களில் ஒன்றை மயக்கமருந்து நிபுணர் உங்களுக்கு பரிந்துரைப்பார்.**

• பிரசவ வலியானது நேரடியாக ஏற்படாவிட்டால், **தண்டுவடத்தில் கதீட்டர் மூலம் மயக்கமருந்து அளித்தலை பின்னர் எடுத்துக் கொள்வதைக்** காட்டிலும் பிரசவ வலியின் ஆரம்பத்திலேயே எடுத்துக்கொள்ள நீங்கள் நினைக்க வேண்டும், ஏனென்றால் உங்களுக்கு ஒரு தண்டுவட ஊசி மூலம் அல்லது தண்டு வட மேல்சவ்வில் கதீட்டர் மூலம் மயக்கமருந்து அளிக்க வழக்கமான நேரத்தைக்காட்டிலும் அதிக நேரம் தேவைப்படக்கூடும்.

• பிரசவ வலியின் போது நீங்கள் தண்டுவட மேல்சவ்வில் கதீட்டர் மூலம் மயக்கமருந்து எடுத்துக் கொள்வதை மயக்கமருந்து நிபுணர் ஊக்குவிப்பார். எனவே இதன்மூலம் உங்களுக்கு ஒரு சிசேரியன் அறுவை சிகிச்சை தேவைப்படும் போது பொது உணர்வகற்றும் மயக்கமருந்து அளிக்கப்படுவதை நீங்கள் தவிர்க்கலாம்.

நீங்கள் பிரசவ வார்டில் அனுமதிக்கப்படும் போது, நீங்கள் ஒரு மயக்கமருந்து நிபுணரைப் பார்த்து விட்டீர்கள் என்பதை மகப்பேறு செவிலியர்களிடம் தயவு செய்து கூறுங்கள். இதன் மூலம் பணியில் உள்ள மயக்கமருந்து நிபுணர் நீங்கள் கர்ப்பகாலத்தின் போது பார்த்த மூத்த மயக்கமருந்து நிபுணர் பரிந்துரைத்த திட்டத்தின் படி செயலாற்ற முடியும்.

**© Obstetric Anaesthetists' Association**
Registered Charity No 1111382
www.oaaformothers.info
October 2009

## Why do I need to see an anaesthetist during my pregnancy? TAMIL
## Information for pregnant women with a high body mass index (BMI)

பிரசவம் முழுவதும் நாங்கள் உங்களுக்கு அமில எதிர்ப்பு மாத்திரை (ரேனிட்டிடின் போன்றவை) ஒன்றை அளிப்போம். இது உங்கள் வயிற்றில் உள்ள அமிலத்தைக் குறைக்கிறது. நீங்கள் பிரசவ வலியில் இருக்கும் போது எந்த திட அல்லது கொழுப்பு நிறைந்த உணவையும் சாப்பிடாமல் இருப்பதும் சிறந்தது. தண்ணீர் அல்லது நீர்க்குமிழிகள் இல்லாத விளையாட்டுப் பானங்களை (லுயுக்காஃசேட் ஸ்போர்ட்™) அருந்துவது பாதுகாப்பானது.

நீங்கள் உங்கள் குழந்தையைப் பெற்றெடுத்த பின்பு, நாங்கள் உங்களுக்கு ஹெப்பாரின் ஊசிமருந்துகளை சிலநாட்களுக்கு அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். இது இரத்தத்தை மெலிய வைத்து உங்கள் கால்கள் மற்றும் மார்பில் இரத்த உறைவுகள் உருவாகுவதை தடுக்க முயற்சி செய்யும். இந்தப் பிரச்சினை கர்ப்பத்திற்கு முன்னும் பின்னும் மிகவும் பொதுவாக ஏற்படக்கூடியதாகும் மற்றும் இது உயர் பிஎம்ஐ கொண்ட பெண்களுக்கு ஏற்படும் வாய்ப்பு மிகவும் அதிகம். ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை நாங்கள் உங்களுக்கு ஹெப்பாரின் ஊசிமருந்து அளிப்போம்.

**சுருக்கம்**

உங்களின் பிஎம்ஐ (BMI) 35 க்கு மேல் இருந்தால், குறைவான பிஎம்ஐ உள்ள யாரேனும் ஒருவரோடு ஒப்பிடும் போது, உங்கள் குழந்தையை பிரசவிப்பதற்கு சில வகையான உதவியைப் பெற வேண்டிய அவசியம் உங்களுக்கு அதிகமாக ஏற்படலாம்.

- பொதுவாக உங்கள் குழந்தையைப் பிரசவிக்கும் போது நீங்கள் விழித்துக்கொண்டிருப்பது சிறந்தது.
- உங்களுக்கு பொது உணர்வகற்றும் மயக்கமருந்து அளிப்பது குறைந்த பிஎம்ஐ(BMI) கொண்ட பெண்களுக்கு மயக்கமருந்து அளிப்பதைக் காட்டிலும் அதிக சிரமம் கொண்டதாக இருக்கக்கூடும் மற்றும் மயக்கமருந்து நிபுணர்கள் இதற்காகத் திட்டமிடுவது அவசியமாகும்.
- தண்டு வட ஊசி மூலம் மயக்கமருந்து அளித்தல் மற்றும் தண்டுவட மேல்சவ்வில் கதீட்டர் வழியாக மயக்கமருந்து அளித்தல் ஆகியவை மிகுந்த சிரமம் கொண்டதாகவும், நீண்ட நேரம் பிடிப்பதாகவும் அமையலாம். ஒரு வேளை உங்களுக்கு ஒரு சிசேரியன் அறுவை சிகிச்சை தேவைப்பட்டால் அல்லது உங்கள் குழந்தையை கத்திரிக்கோலை அல்லது வெற்றிடக்கோலைப் பயன்படுத்தி விரைவாக வெளியில் இழுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தண்டுவட மேல்சவ்வில் கதீட்டர் வழி மயக்கமருந்து அளித்தலை பிரசவ வலிக்கு பின்பு எடுத்துக்கொள்வதைக் காட்டிலும் வலியின் ஆரம்பத்திலேயே எடுத்துக்கொள்வது சிறந்ததாக இருக்கக்கூடும்.
- உங்கள் குழந்தையை பிரசவிக்க நீங்கள் பிரவச வார்டுக்குள் போகும்போது, பணியில் இருக்கும் மயக்கமருந்து நிபுணரை நான் அவசியம் பார்க்கவேண்டும் என உங்கள் மகப்பேறு செவிலியர்களிடம் கூறுங்கள்.
- நீங்கள் பிரசவ வலியில் இருக்கும் போது, எந்த திட அல்லது கொழுப்பு நிறைந்த உணவுகளையும் சாப்பிடாமல் இருப்பது சாலச் சிறந்தது.

இந்த சிறுபுத்தகம் ராயல் பெர்க்ஸயர் மருத்துவமனையில் உள்ள மகப்பேறு மயக்கமருந்து நிபுணர்களால் எழுதப்பட்டது. இது மகப்பேறு மயக்கமருந்து நிபுணர்கள் சங்கத்தின் தாய்மார்களுக்கான தகவல் துணை செயற்குழுவால் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

துணைச்செயற்குழு பின்வரும் நபர்களால் ஆனது.

- டாக்டர்.ரோசி ஜோன்ஸ் (தலைவர்)
- சேரிஸ் பீனன்
  ( தேசிய குழந்தை பிறப்பு டிரஸ்டின் பிரதிநிதி)
- சாகின் சவுத்திரி
  (நுகர்வோர் பிரதிநிதி)
- டாக்டர். ரெய்ச்சல் கொலிஸ்
- டாக்டர். ரோனா கியூஸ் (ராயல் காலேஜ் ஆஃப் ஆப்ஸ்டர்டீசியன்ஸ் அண்ட் கைனகாலஜிஸ்ட்ஸ்- ன் பிரதிநிதி)
- கெயில் ஜாண்சன்
  (ராயல் காலேஜ் ஆஃப் மிட்வைப்ஸ்- ன் பிரதிநிதி)
- டாக்டர். மைக்கேல் கின்செல்லா
- டாக்டர். ரத்தினசபாபதி சசிதரன்

**ஆதாரம்:**


தாயின் உடல்பருமன், கருவளரும் காலத்தின் அளவு, காலம் கடந்த கர்ப்பத்தின் அபாயங்கள் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் பிரசவ வலி தானாகவே தொடங்குதல். பிரிட்டிஷ் ஜர்னல் ஆஃப் ஆப்ஸ்டர்டிக்ஸ் அண்ட் கைனகாலஜி. மகளிர் நோய் மற்றும் மகப்பேறு மருத்துவம் குறித்த ஒரு சர்வதேச இதழ். தொகுதி 115, வெளியீடு6, தேதி:மே2008, பக்கங்கள்:720 முதல்725.
எப்சி டெனிசன், ஜெ பிரைஸ், சி கிரஹாம், எஸ் வைல்ட், டபிள்யூ ஏ லிஸ்டன்.



**© Obstetric Anaesthetists' Association**
Registered Charity No 1111382
www.oaaformothers.info
October 2009